மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது உரிமைப் பிரச்சினையில் வராது.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் அதில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறான தகவல் அதில் இல்லை. சரியான தகவலைத் தான் சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

24-2-1996 அன்று கோவை அருகே சத்தியமங்கலம் சாலையில் கார் ஒன்றில் குண்டு வெடித்து ஒருவர் இறந்ததும் சிலர் காயமுற்றதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவைக்கு அருகே சத்தியமங்லம் சாலையில் உள்ள சரவணம்பட்டியில் பிப்ரவரி 24-ஆம் தேதி காலையில் ஒரு மாருதி காரில் பயங்கர குண்டு வெடித்து ஒருவர் இறந்தது மற்றும் சிலருக்குக் காயம் ஏற்பட்டது பற்றிய பிரச்சினையைப் பேரவையில் எழுப்பி, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையைப் பற்றி விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்று அனுமதி கோரி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன், திரு. எஸ். டேனியல்ராஜ், திரு. ச. அழகிரி, திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர். சிங்காரம், திரு. ஜி. பழனிசாமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் என்னிடத்தில் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு பிற அலுவல்களை ஒத்திவைத்து ஆய்வு செய்யவேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அன்று அதாவது 24-2-1996-ஆம் நாள் அன்று கோவை-சத்தியமங்கலம் சாலையில் கோவைக்கு மிக அருகில் உள்ள சரவணபட்டியில் ஒரு மாருதி காரில் குண்டு வெடித்திருக்கிறது. அந்தக் குண்டு வெடித்ததின் விளைவாக அங்கே ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார், மற்றும் ஒருவருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது,

1996 பிப்ரவரி 26] [திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்]

படுகாயம் ஏற்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்தக் கார் குண்டு வெடிப்புக்கு சில நிமிடங்களுக்கு முன்பு தான் அங்கே வந்து நின்றதாகவும், அந்தக் காரில் இருந்து இறங்கிய 2 பேர் அருகில் உள்ள எஸ்.டி.டி. பூத்தில் தொலைபேசியில் தொடர்புகொள்வதற்காக சென்றதாகவும் சொல்கிறார்கள். அந்தக் காரில் மொத்தம் 5 பேர் பயணம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. வெடிவிபத்து ஏற்பட்ட உடன் ஒருவர் அங்கே கொல்லப்பட்டார். அவருடைய பெயர் கண்ணன். அவரோடு அந்தக் காரில் வீற்றிருந்த நரேந்திரகுமார் என்கிற நரேந்திரகுமார் பகதூருக்கு காயம் ஏற்பட்டு இருப்பதாகவும் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சொல்கிறார்கள். அங்கே மிக அருகில் ஒருவர் நின்று இருந்திருக்கிறார், தொலைபேசிக் கூண்டுக்கு அருகில் 2 பேர் இருந்து இருக்கிறார்கள். அந்த 3 பேரும்-- ஆசைத்தம்பி, ரகு, மூர்த்தி என்ற 3 பேரும் இந்தக் குண்டு வெடித்த உடன் அந்த இடத்திலிருந்து ஓடி தப்பித்து விட்டார்கள். அந்தக் கார் திருப்பூரிலிருந்து பல்லடம் வழியாக கோவைக்கு வந்து கோவையிலிருந்து ஊட்டிக்கு செல்வதற்காக அந்த வழியாக சென்றதாகச் சொல்கிறார்கள். இது நம்பும்படியாக இல்லை. காரணம், திருப்பூரிலிருந்து ஊட்டி செல்வதாக இருந்தால் அவினாசி, மேட்டுப்பாளையம் வழியாக நேரடியாகச் செல்லலாம். கோவையில் வேலை இருந்திருந்து கோவைக்கு வந்திருந்தாலும்கூட அதுவும் பல்லடம் வழியாக கோவைக்கு வந்திருக்கிற நேரத்தில் கோவையில் ஏதாவது வேலை பார்த்துவிட்டு பிறகு ஊட்டிக்குச் செல்வதாக இருந்தாலும் கூட மேட்டுப்பாளையம் சாலையில் பெரியநாயக்கன் பாளையம், காரமடை வழியாக மேட்டுப்பாளையம் சென்றுதான் செல்வார்கள். சத்தியமங்கலம் ரோட்டில் சரவணம்பட்டிக்குச் சென்று பிறகு அன்னூர் சென்று மேட்டுப்பாளையம் செல்வது என்பது சாதாரணமாக நடைபெறுகிற ஒன்று அல்ல. இந்த 5 பேரும் அங்கே எப்படி வந்தார்கள்? என்ன வேலையாக வந்தார்கள் என்பது தெளிவாக இல்லை. பல்வேறு விதமாக சொல்லப்படுகிறது. அதிலே ஒருவர் காவலாளியாக இருந்தாலும் கூட மற்றவர்கள் படித்தவர்களாக இருக்கிறார்கள். நன்கு படித்தவர்களாக இருக்கிறார்கள். ஒருவர் இன்னும் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் அவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் என்ன காரண, காரியமாக வந்தார்கள்? என்ன வேலையாக வந்தார்கள் என்பது தெளிவாக தெளிவாக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் அந்த 5 பேரும் ஏற்கனவே குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக

அந்தக் காரில் இருந்த ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் அந்தக் காருக்கு உரிய நம்பர் அல்ல. அந்த ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் ஸ்ரீவில்லிப்புத்தூரிலே ஒரு இரு சக்கர வாகனத்திற்குத் தரப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆக வேறு ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரை வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் ஏற்கனவே பல கார் திருட்டுக்களில் ஈடுபட்டவர்கள் என்று சொல்கிறார்கள். வேறு குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ன வேலையாக வந்தார்கள்? 5 பேர் ஒன்றாக சேர்ந்து வந்திருக்கிறார்கள். காரில் வெடி குண்டு இருந்திருக்கிறது. குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கொலை போன்ற குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. தாராளமாக நடமாடும் நிலையிலிருந்து வெடிகுண்டும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலை இருந்திருப்பது நமக்கெல்லாம் கவலை அளிப்பதாக இருக்கிறது. நாட்டிலே வெடிகுண்டு இருக்கிறது. திருட்டுச் சம்பவங்களிலே, வேறு குற்றவியல் நடவடிக்கைகளிலே ஈடுபடுபவர்கள் தாராளமாக நடமாட முடிகிறது என்பது நமக்கெல்லாம் கவலை அளிக்கக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது. எனவே, பல்வேறு குற்றங்களைப் புரிந்தவர்ள் இப்படி தாராளமாக நடமாடுவது நமக்குக் கவலை அளிக்கின்ற காரணத்தினாலே, படித்தவர்கள் இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுவது ஏன் என்பதையும் நாம் தெளிவாக இங்கே விவாதிக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். எனவே, இதைப் பற்றி முழு விவரங்களையும் வெளிக்கொணரும் வகையில் இங்கே விவாதம் நடத்தப்பட வேண்டும். அதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து முழுவதுமாக விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24-ஆம் தேதி சத்தியமங்கலத்துக்கு அருகாமையில் நடந்திருக்கிற வெடிகுண்டு விபத்து பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) கோவைக்கு அருகிலே, அந்த வெடிகுண்டு விபத்திலே ஒருவர் இறந்து போயிருக்கிறார். இரண்டு பேர் தப்பிப் போயிருக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டுமானால், அங்கு கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் தப்பிச் சென்றதாகத் தகவல் கூறுகிறார்கள். ஆனால் இந்த விபத்து என்பது காரிலே வெடிகுண்டு வெடிக்கவில்லை என்று

1996 பிப்ரவரி 26] [திரு. ஜி. பழனிசாமி]

சொன்னால், 24-ஆம் தேதி வேறு எங்கேயாவது ஒரு விபத்தை ஆளாக்கக்கூடிய அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அவர்கள் ஈடுபடுவதற்காக திட்டம் இட்டு நடந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால், காவல்துறையின் மூலமாக இதுகுறித்து முழு விசாரணை நடத்தப்படவேண்டும். தமிழகம் ஒரு அமைதிப் பூங்கா. வெடி விபத்தெல்லாம் இல்லாத ஒரு மாநிலம். இந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட தீய சக்திகள் இருக்கிறார்கள் என்பதனை தாங்கள் உணர வேண்டும் என்பதனை நான் கேட்டுக்கொண்டு இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தமிழகத்தில் இதுபோன்ற, ஒரு சங்கிலித் தொடர் போன்ற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. ஆகையால், இதுபற்றி அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், திருப்பூரிலிருந்து ஊட்டி நோக்கி 24-2-1996 அன்று வந்து கொண்டிருந்த மாருதி காரில், கோவை, சரவணம்பட்டி, வெள்ளிக்கிணறு பிரிகிற ரோட்டிலே, அந்த மாருதி காரில் வெடிகுண்டு வைக்கப்பட்டு, கண்ணன் என்ற ஒருவர் இறந்து விட்டார். ஒருவர் ஆபத்தான நிலையில் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். மூன்று பேர் தப்பித்துச் சென்று இருக்கிறார்கள். இதனுடைய உள்நோக்கம் என்னவென்று புரியவில்லை. சதித் திட்டம் தீட்டியது யார்? கோவையில் அடிக்கடி வெடிகுண்டு விபத்துக்கள் நடக்கின்றன. இது யாருடைய சதித் திட்டம் என்று அரசு ஆராயவேண்டும். அந்த பிளஷரில், அந்த மாருதி காரில் அரிவாள் இருக்கிறது. வெடிகுண்டுகள் இருக்கின்றன. இவர்கள் யாரையோ கொலை செல்வதற்காக, வெடிகுண்டு வைத்து கொலை செய்ய இருந்தார்களா அல்லது இந்த நாட்டில் நாச வேலையை ஏற்படுத்துவதற்கு சதித்திட்டம் தீட்டி இருக்கிறார்களா என்று அரசு ஆராய வேண்டும்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, எல்லாவற்றையும் பற்றி இங்கே விவாதிக்க முடியாது.** என்று நீங்கள் எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டே போனால் அது தவறான முன்னுதாரணமாக ஆகிவிடும். (குறுக்கீடு) அது யாருடைய சதித் திட்டம் என்று வேண்டுமானால் கேளுங்கள்.**குறிப்பிட்டுச்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1996 பிப்ரவரி 26] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்களுடைய கடமை. எங்கள் கடமையை ஆற்றினோம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: *24-2-1996* அன்று, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட, காட்டூர் காவல் நிலைய எல்லைக்குள் அமைந்துள்ள, சரவணம்பட்டி என்ற இடத்தில் மாருதி கார் ஒன்றில், குண்டு வெடித்து ஒருவர் மரணமடைந்த நிகழ்ச்சியை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சில உறுப்பினர்கள் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். இந்த நிகழ்ச்சி தொடர்பாக, சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

24-2-1996 அன்று காலை சுமார் *11-00* மணி அளவில் TN-*67*-Z *5252* என்ற எண்ணுடைய மாருதி காரில், *5* பேர் சத்தியமங்கலம் சாலையில் உள்ள சரவணம்பட்டி என்ற இடத்திற்கு வந்ததாகவும், அருகில் இருந்த STD தொலைபேசி கடை முன்பு காரை நிறுத்தி விட்டு, இரண்டு பேர் மட்டும் தொலைபேசியில் பேசச் சென்றதாகவும், அந்த நேரத்தில் காரில் *3* பேர் உட்கார்ந்து இருந்ததாகவும், அப்போது காரில் குண்டு வெடித்ததாகவும் தெரிகிறது. காவல் துறையினர் இது தொடர்பாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சில விவரங்கள் தெரிய வந்துள்ளன.

சம்பவத்தில் ஈடுபடுத்தப்பட்ட மாருதி கார், ஏற்கனவே திருப்பூரில் களவு போன கார் என்றும், அதனுடைய பதிவு எண்ணை மாற்றி உபயோகப்படுத்தியதாகவும் தெரிய வந்துள்ளது. அந்தக் காரின் உண்மையான பதிவு எண் TN-*37*-K *0082* என்றும், திருப்பூரைச் சேர்ந்த திரு. வி. சுப்பிரமணியம் என்பவருக்குச் சொந்தமானது என்றும், *4-2-1996* அன்று அதிகாலை அந்தக் காரை ஓட்டுநர் சாத்தையா என்பவர் ஓட்டி வரும்போது, *4* பேர் அவரை அடித்துவிட்டுக் காரைக் கடத்திச் சென்றுவிட்டதாகவும் தெரிகிறது. இது தொடர்பாகத் திருப்பூர் வடக்கு காவல் நிலையக் குற்ற எண் *121/96* இல், இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு *394*-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் தேடப்பட்டு வந்த கார், சம்பவத்தில் தொடர்புடைய மாருதி கார் என விசாரணையில் தெரிய

சொல்லுகிறபோது, அது தவறான முன்னுதாரணமாக ஆகிவிடும். ஆகவே, அதெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) சதித் திட்டமாக இருக்குமோ என்று உங்களுடைய சந்தேகத்தை வேண்டுமானால் எழுப்பலாம். ** பற்றி இதிலே சொல்வது என்பது சரியாக வராது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி ஒரு சில அமைப்புகளெல்லாம், தீவிர அமைப்புகளெல்லாம் கோயம்புத்தூர் மாவட்டத்திலே செயல்படுகின்றன. அதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிந்தாலே போதும். பத்திரிகைகளிலே வந்து நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அந்த இலாக்காவினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரியப்படுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அங்கேயிருந்த டெலிஃபோன் பூத்திற்கு ஃபோன் செய்ய மூன்று பேர் சென்று இருக்கிறார்கள். யாருக்கு அவர்கள் ஃபோன் செய்தார்கள் என்று தெரியவேண்டும். அதுமட்டுமல்லாமல், இப்போது கோவை மருத்துவமனையில் இருக்கின்ற காயம் பட்டவரிடம் விசாரணை நடத்தப்பட்டதா? விசாரணையில் அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்; யார் அவர்கள்; அவர்கள் ஏதேனும் வழக்கில் சம்பந்தப்பட்டு உள்ளதாக போலீஸ் அதிகாரிகள் சொல்கிறார்களா என்கின்றவற்றை ஆராய வேண்டும். ஸ்ரீவில்லிப்புத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஒரு பைக்கினுடைய நம்பரை, அந்த பிளஷருக்கு ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணி வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் புலன் விசாரணை செய்து, தவறு செய்தவர்கள் மீது அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது? இது சம்பந்தமாகவெல்லாம் பேச வேண்டும். ஆகவே, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

முற்பகல் 11–35

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நல்ல மனதோடும், உள்ளார்ந்த அன்போடும் எனக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இம்மாமன்றத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வந்துள்ளது. அந்தக் காரில் ரகு, ஆசைத்தம்பி, கண்ணன், நரேந்திரகுமார் பகதூர் மற்றும் மூர்த்தி ஆகிய 5 பேர் பயணம் செய்து வந்ததாகத் தெரிகிறது. தொலைபேசியில் பேசுவதற்காக ரகு மற்றும் ஆசைத்தம்பி ஆகிய இருவரும் சென்றபோது தங்கள் கையிலிருந்த சிறு பையைக் காரில் அமர்ந்திருந்த கண்ணன் என்பவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றதாகவும், அந்த நேரத்தில்தான் அந்தப் பையில் இருந்த வெடிகுண்டு வெடித்துள்ளதாகவும் தெரிகிறது.

அதனைத் தொடர்ந்து ரகு, ஆசைத்தம்பி மற்றும் காரில் அமர்ந்திருந்த மூர்த்தி ஆகிய மூவரும் சம்பவ இடத்தை விட்டு ஓடிச் சென்று விட்டனர். இந்த விபத்தில் காயம் அடைந்த நரேந்திரகுமார் பகதூர் என்பவர், அந்த இடத்தை விட்டு ஓடிச் செல்ல முடியாமல் வண்டியில் இருந்து வெளியே வந்துள்ளார். காரில் உட்கார்ந்திருந்த கண்ணன் என்பவருக்கு, உடலின் வயிற்றுப் பகுதியிலும் வலது கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டு, அதன் காரணமாகச் சம்பவ இடத்திலேயே மரணம் அடைந்துள்ளதாகவும் தெரிகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் காட்டூர் காவல் நிலைய குற்ற எண் 602/96-இல், இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 302-இன் கீழும், இந்திய வெடி மருந்துப் பொருட்கள் சட்டம், பிரிவு 5-ன் கீழும், வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-40

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய ஆசைத்தம்பி, ரகு என்கின்ற ரகுவரன் ஆகிய இருவரும் ஏற்கனவே ஒரு கொலைக் குற்றத்திலும், ஒரு தாக்குதல் குற்றத்திலும் ஈடுபட்டவர்கள் எனப் புலன் விசாரணையில் தெரிய வந்துள்ளது. சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசைத் தம்பி மற்றும் அவரது சகோதரர் பால்ராஜ் என்பவர் மீது சாத்தான்குளம் காவல் நிலைய குற்ற எண் 27/95 இல் இந்தியத் தண்டனைச் சட்டம் 302 பிரிவின் கீழும், அதே காவல் நிலையக் குற்ற எண் 662/90-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 506 உட்பிரிவு (2) ஆகிய பிரிவுகளின் கீழும் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரகு என்பவரும் சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது. கருமத்தம்பட்டியில் பொறியியல் பட்டயப் படிப்பைப் படித்தவர் என்றும், கருமத்தம்பட்டி காவல்நிலையக் குற்ற எண் 109/95 மற்றும் 254/95 ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட இரண்டு வழக்குகளில்

1996 பிப்ரவரி 26] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தொடர்புடையவர் என்றும் தெரிகிறது. மூர்த்தி என்பவர் "Thanjavur Enterprise Construction Company" என்ற தனியார் நிறுவனத்தில் சூபரவைசராக வேலை பார்த்து வருகிறார். நரேந்திரகுமார் பகதூர் என்பவர் நேபாளத்தைச் சேர்ந்த கூர்க்கா என்றும் திருப்பூரில் வேலை பார்த்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது. இவர்கள் ஐந்து பேரும் திருப்பூரில் களவு போன காரை உபயோகித்து, குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாக காவல் துறையினர் சந்தேகப்படுகின்றனர். மேலும் இவர்கள் குற்றங்களைச் செய்து வருகின்ற ஒரு கும்பல் என்றும் கருதப்படுகிறது. அவர்கள் பயணம் செய்த காரில் கத்தி, பிச்சுவா மற்றும் கம்பு ஆகியவை இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றில் இருந்து குற்றங்களை நிகழ்த்துகின்ற ஒரு கும்பலாக இவர்கள் செயல்பட்டு வருகின்றனர் என்று காவல் துறையினர் கருதுகின்றனர். எனினும் இது தொடர்பாக மேல் விவரங்கள் பெற அந்தச் சம்பவ இடத்திலிருந்து ஓடிப்போனவர்களை காவல் துறையினர் தேடி வருகின்றனர். அவர்கள் ஊட்டி திசையை நோக்கி சென்று கொண்டிருந்தனர் என சந்தேகப்பட வாய்ப்பு இருந்தாலும், எந்தக் காரணத்திற்காக அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள் என்பது பற்றியும், எத்தகைய குற்றங்களைப் புரிவதற்காக திட்டமிட்டிருந்தார்கள் என்பது பற்றியும் காவல் துறையினர் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

காவல் துறையினர் இந்த வழக்கில் துரிதமாக விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென நான் ஆணை பிறப்பித்துள்ளேன். விரைவில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது விளக்கத்தின் அடிப்படையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின்னர் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையெனக் கருதி அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.